# நசரேன் திருச்சபை

## எங்கள் நம்பிக்கை

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய ஒரே  தேவன் உண்டு.

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டு வேதாகமங்கள் முற்றிலும் தேவ ஆவியினாலே அருளப்பட்டு, விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் அவசியமான அனைத்து சத்தியங்களையும் உள்ளடக்கியது.

மனிதக்குலம் முழுவதும் விழுகைக்கான சுபாவத்தோடு பிறக்கிறது, அதனால் தொடர்ந்து தீமையில் நாட்டம் கொண்டுள்ளது.

பாவத்தை உணர்ந்து, வருந்தாதவர்கள் இறுதியில் நம்பிக்கையற்ற நிலையில், நித்திய அழிவிற்குட்டவர்கள்.

இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டான பாவநிவிர்த்தியானது முழு மனித இனத்திற்குமானது. மனம்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவரும், பாவத்தின் ஆளுகையிலிருந்து நீதிமான்களாக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, இரட்சிக்கப்படுவார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம், விசுவாசிகள் மறுபிறப்பைத் தொடர்ந்து, முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுவார்கள்.

விசுவாசிகளின் மறுபிறப்புக்கும், முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் பரிசுத்த ஆவியானவர் சாட்சி பகருகிறார்.

நம்முடைய கர்த்தர் திரும்ப வருவார், மரித்தோர் உயிர்த்தெழுவர், மேலும் இறுதி நியாயத்தீர்ப்பு நடைபெறும்..